உ

ஸௌராஷ்டிரப் பிரக்ஞை

# ஐந்தாவது மகாநாடு.

மதுரை.

உபசரணைக் கமிட்டி சேர்மன்

மகா-ா-ா-ஸ்ரீ கெ. மூ. வெங்கடாசலபதி ஐயர்

அவர்களால்

1920ம் வருஷம் ஜூலை மீ 17, 18, 19ல்

வாசிக்கப்பெற்ற

## அட்ரஸ்.

ஈ. கே. ஸி. பிரஸ், மதுரை.

1920.

03 JUL 19..

Y592 S
N20.
172535

உ

ஸௌராஷ்ட்ரப் பிராமண

# ஐந்தாவது மகாநாடு.

ம து ரை.

உபசரவணைக் கமிட்டி சேர்மன்

மகா-ள-ள-ஸ்ரீ சி. மு. வெங்கடாசலபதி ஐயர்

அவர்களால்

1920ம் வருஷம் ஜூலை மீ 17, 18, 19உ

ஸ்ரீராமஜெயம்

# ஸௌராஷ்ட்ரப் பிராமண ஐந்தாவது மகாநாடு.

## வரவேற்புக்கமிட்டி சேர்மன் பிரசங்கம்

### வந்தனோபசாரம்.

சகோதரப் பிரதிநிதிகளே! சீமாட்டிகளே!! பெருமான்களே!!!

இன்று இம்மதுரைமா நகரத்தில் நமது ஸௌராஷ்ட்ரப்பிராமண மகாநாடு கூடும்படியாய் அமைந்தது பற்றி மிக்க சந்தோஷமடைகிறேன்.

இம்மதுரைமா நகரமானது புராதன காலந்தொட்டு புராண சம்பந்தமாகப் பெருமைவாய்ந்தது. சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடல்கள் நடந்த இடம் இம்மதுரையே. கவிகளின் பொருள் கண்டருளிய அச்சோமசுந்தரக் கடவுளும் சங்கப் புலவர்களோடு கூடியமர்ந்து தமிழையாராய்ந்ததும் இம்மதுரையே. பாண்டியர்களுக்கு வெகுகாலம் இராஜதானியாக இருந்து தமிழணங்கை ஆதரித்து வந்த இடமும் இதுவே. தேவர்களாலும் ரிஷீஸ்வரர்களாலும் கடம்பவனக்ஷேத்திரமென்று பயபக்தியுடன் போற்றப்படும் ஸ்தலமும் இதுவே. தற்காலம் தென்னிந்தியாவில் பிரயாணம் செய்யும் ஒவ்வொரு யாத்திரை வாசிகளின் கவனத்தையும் பற்றி இழுக்கும்படியான புராதன கட்டடங்களாகிய கோயிலும் மஹாலும் மாரியம்மன் தெப்பக்குளமும் அடங்கியுள்ளது இம்மதுரையே. இவ்வாறு பலரால் போற்றப்படும் பெருமை வாய்ந்ததும் ஆதிகாலந்தொட்டு கல்வியில் சிறந்தோங்கிய பற்பல புலவர்பெருமான்களிடையவும்

172535



அதிமேதாவிகளினுடையவும் பிறப்புக்கு இடமாகயிருந்த இம்மதுரையில் நமது மகாநாடு கூடியிருப்பதானது மகாநாட்டினாலுண்டாகும் பலன் திருப்திகரமாகவே இருக்கும் என்பதைக்காட்டுகின்றது.

Y5925

## வந்தனோபசாரம்.

இன்று கூடியிருக்கும் ஸௌராஷ்ட்ரப் பிராமண மகாநாட்டிற்கு என்னை வரவேற்புக் கமிட்டி சேர்மனாகத்தெரிந் தெடுத்ததைப் பற்றி எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் இப்பதவிக்கு அருகனல்லேனாயினும் "சாதூனாம்தர்சனம் புண்யம்" என்ற நியாயத்திற்கிணங்க உங்களெல்லோரையும் தரிசித்த புண்ணியவிசேஷத்தால் நான் இப்பதவிக்கு அருகனாய்விட்டதாகவே வைத்துக்கொள்ளுகிறேன். வரவேற்புக்கமிட்டியின் தலைவன் என்றமுறையில் உங்கள் அனைவரையும் நல்வரவு கூறுகிறேன். இந்தமகாநாடு இனிது நிறைவேறும்படிக்கும் நம்மிஷ்டம் சித்தியாகும்படிக்கும் அனுக்கிரகிக்க சர்வவல்லமையுள்ள ஈஸ்வரனை இறைஞ்சுவதோடு உங்கள் எல்லோருடைய ஆசிர்வாதத்தையும் ஒத்துழைப்பு சகாயத்தையும்தாழ்மையுடன் கோருகிறேன்.

## நம்மவர்களின் பூர்வீக சரித்திரம்

சகோதரர்களே! ஸௌராஷ்ட்ரப்பிராமணர் ஆரியர்களில் ஓர்பிரிவினர். விந்தியமலைக்கும் ஹிமயமலைக்கும் மத்தியிலிருக்கும் ஆரியவர்த்தமென்னும் தேசத்தில் வசித்ததுபற்றி ஆரியர்என்று பெயர் வழங்கலாயிற்று. இந்த ஆரியர்களில் சிலர் தெற்கேவந்தபோது ஸௌராஷ்ட்ர தேசத்தில் தங்கியிருந்தார்கள். ஆனதால் அவர்கள் ஸௌராஷ்ட்ரப் பிராமணர்களென்று அழைக்கப்பட்டார்கள். இப்பொழுது கத்தியவார் என்று அழைக்கப்படும் தேசமே முற்காலத்தில் ஸௌராஷ்ட்ர தேசமாயிருந்தது. ஸ்ரீ கண்ணபிரான் வசித்ததும் இராஜ்யபாரம் செலுத்தியதுமான துவாரகாபுரியானது ஸௌராஷ்ட்ர தேசத்தைச்சேர்ந்தது என்று உங்களுக்குத் தெரிவிக்க நான் மிகுதியும் பெருமையடைகிறேன். அங்கே அவர்கள் வெகு

சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் காலங்கழித்துவந்தார்கள். ஆனால் துரதிர்ஷ்ட வசத்தால் அவர்கள் தங்கள் தேசத்தைவிட்டு வெளியேறவேண்டியதாயிற்று. அந்த மகிமைபொருந்திய தேசத்தைவிட்டு வர நேரிட்டகாரணம் யாதெனில் கி. பி. 1024ல் கஜினி மகம்மது கலகம் முதல் அலாவுதின், டைமூர் முதலிய மகம்மதிய அரசர்கள் சுமார் கி.பி. 1500ம் வருடம்வரை பஞ்சாப் மஹாராஷ்ட்ரம், ஸௌராஷ்ட்ரம் முதலியதேசங்களின்மீது படையெடுத்துவந்து அதன் நிமித்தம் கலகங்கள் ஏற்பட்டன. அப்பேற்பட்ட இராஜாங்கப்புரட்சியின் மத்தியில் இருக்க சகியாதவர்களாய் தங்கள் உயிர் தப்பினால் போதுமென்று வெளிதேசங்களுக்குக் கிளம்பிவிட்டார்கள். அங்கிருந்துவந்து சிலகாலம் தேவகிரியில் வசித்தார்கள். பிறகு கி. பி. 1294ல் அங்கும் கலகங்கள் ஏற்பட்டதால் தெற்குமுகமாக வந்து சிலகாலம் விஜயநகரத்தில் ஸ்திரமாக வசித்துவந்தார்கள். இது தெலுங்கு இராஜ்யமானபடியால் தேசப்ரஜையான தெலுங்கு லிபி எழுதவும் படிக்கவும் பேசவும் கற்றுக்கொண்டார்கள். இதனாலேயேகாலாந்தரத்தில் தங்கள் ஸௌராஷ்ட்ரபாஷையில் சில தெலுங்கு பதங்கள் கலக்கலாயின. பின்பு கி.பி. 1530க்கு மேல் மகம்மதியர்கள் மேற்படி விஜயநகர இராஜ்யத்தை பன்முறை எதிர்த்துத் தாக்க ஆரம்பித்தார்கள். அதனால் இவர்கள் தெற்குமுகமாகத் திரும்பி சோளநாட்டின் பற்பலபாகங்களில் குடியேறினார்கள். அப்படிச் [illegible] வாழ்ந்துவரும் காலத்தில் அப்பொழுது மதுரைமாநகரையாண்டு வந்த திரு[illegible] நாயக்கர் அவர்கள் இவர்களுடைய தொழிற்திறத்தையும், புத்திசாதுர்யத்தையும் கேள்விப்பட்டு தன்னாட்டிலும் வந்து வசிக்கும்படி வேண்டிக்கொண்டனர். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க பாண்டியநாட்டிலும் குடியேறி வசிக்கலாயினர். அப்படி வந்தவர்களுக்கோ இந்ததேசத்து ஆசாரம், பாஷை முதலியன ஒவ்வாதிருந்தமையினால் இங்குள்ள பிராமணர்களுடன் பரஸ்பரம் சம்மந்தம் உண்டாகவில்லை. மேலும் ஸௌராஷ்ட்ர பாஷை இத்தேசத்தவர்க்குத் தெரியாதமையால் இவர்களை

டையபூர்வோத்தரங்கள் அவர்களுக்கு ஸ்பஷ்டமாகத் தெரியவேறாது இல்லாமற்போயிற்று. அதனால் தனி ஏகாகமாகவிருக்க நேர்ந்துவிட்டது. அங்ஙனிருக்க ஏற்பட்ட வியாபாரம், வஸ்திர நிர்மாணம், ஜோதிஷம், வைத்தியம், புரோஹிதம், வித்தியாப்பிரயோகம் பண்ணுவித்தல் முதலிய தொழில்களைச்செய்துகொண்டு ஜாதியாசாரத்திற்கு முக்கியமான கர்ப்பாதானாதி சோடச கர்மங்களும், சந்தியாவந்த நித்திய நைமித்ய கர்மங்களும் அனுஷ்டித்து வந்தார்கள்.

ம தென்தேசத்தில் பிராமணர்கள் நெய்யும் தொழில் செய்வது கிடையாது. ஆனால் வடதேசத்திலோ பிராமணர்களும் நெய்யும் தொழிலைச்செய்யும் வழக்கத்தை வகித்துவந்தார்கள். அதற்கொரு முக்கியகாரணம் உண்டு. அதாவது வடதேசத்திய பிராமணர்கள், பிராமணர்களால் நெய்யப்பட்ட வஸ்திரத்தைத்தவிர வேறு ஜாதியாரால் நெய்யப்பட்ட வஸ்திரங்களை உடுத்துவதில்லை. இதுகாரணம் பற்றியே பிராமணர்கள் நெய்யும் தொழிலை அங்கீகரிக்கவேண்டியதாயிற்று. இந்த அட்டயத்தை யறியாமல் தென்தேசத்துப்பிராமணர்கள் இவர்களுடைய நெய்யும்தொழிலைக்கண்டு கேவலமாக நினைத்தார்கள். இவர்கள் பிராமணர்கள் தானென்றும் ஐயுற்றார்கள். இந்த நிலைமையில் சோழபாண்டிய இராஜ்யங்களில் இவர்கள் ஜீவித்து வந்தார்கள்.

இப்படியிருக்க மதுரைமாநகரில் சுமார் 216 வருஷங்களுக்கு முன் உபாகருமத்தன்றையதினம் சௌராஷ்டிரப் பிராமணர்கள் பதினெட்டுபேர்கூடி அக்கரைக்குச்சென்று உபாகருமம் செய்துகொண்டு மருமகாலத்தில் ஜோதிடரும் கோட்டை யதிகாரியுமான வெங்கடசெல்லய்யாகாரு என்பவர் பிராமணரல்லாதவர்களாகிய நீங்கள் பிராமணர்கள் செய்யவேண்டிய உபாகருமத்தைச் செய்த குற்றத்திற்காக கைதுசெய்கிறேனென்று சொல்லி அவ்விதபிரகாரம் கைதுசெய்து திருச்சியைப் பிரதானபட்டணமாகக் கொண்டு அக்காலத்தில் மதுரைமாநகரையாண்டு வந்த மஹாராணி மங்கம்மாள்

அவர்களிடம் கொண்டுபோய் நிறுத்தினன். இது சங்கதியை யறிந்த மஹாராணியவர்கள் மதசம்மந்தமான இந்தவிவகாரத்தைத் தீர்த்துவைக்கத்தன்னு லியலாதென்று கருதியவர்களாய் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திலும், திருவானைக்காவல் க்ஷேத்திரத்திலுமுள்ள சர்வ சாஸ்திர பாரங்கதர்களான மஹாபண்டிதர்களை சபைகூட்டுவித்து இந்த ஸௌராஷ்ட்ரர்களின் விஷயத்தைத் தீரவிசாரித்தனுப்பும்படி ஆக்யாபித்தார்கள். அந்தப்பண்டிதர்கள் இவர்களைக் கேட்கவேண்டியபலவித கேள்விகளைக் கேட்டானபின் தாங்களும் காத்தியாயனஸ்மிருதி, தேவலஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளையும் மற்றுமுள்ள சாஸ்திரம் புராணம், இதிகாசம் முதலியவைகளைக் கொண்டும் ஆராய்ந்து தெரிந்து கொண்டவர்களாய், கைது செய்யப்பட்டவர்கள் ஸௌராஷ்ட்ர தேசத்துப்பிராமணர்கள் தாமென்றும் பிராமணர்களுக்குரிய எந்தக்கிரியைகளையும் செய்ய இவர்களுக்கு அதிகாரம் உண்டென்றும் சொல்லி அதேபிரகாரம் எல்லா சாஸ்திரிகளாலும் கையெழுத்திடப்பட்ட ஒரு சாசனத்தையும் அப்பால் ராணியவர்களின் உத்திரவின்பேரில் பின்னுமொருசாசனத்தையும் எழுதித்தந்தார்கள். அதையனுசரித்து ராணி மங்கம்மாள் அவர்களும் சாஸ்திரிகளின் தீர்மானத்தை அங்கீகரித்ததற்கு அடையாளமாகத் தங்களுடைய சொந்தமுத்திரையையும் கையெழுத்தையுமிட்டு ஓர் அபயப்பிரதான சாசனத்தையும் அளித்தார்கள். அந்தக்காலம் முதல் இதுகாலம்வரையில் ஸௌராஷ்ட்ரப்பிராமணர்கள் அனைவரும் நிராடங்கமாய் தங்களுடைய ஜாதி, மத, ஆசாரம் இவைகளைக்காப்பாற்றிக் கொண்டு சுகஜீவிகளாய் வாழ்ந்து வருகிறார்கள்.

இப்பொழுது மகாநாடு கூட வேண்டியதின் அவசியம்.

நமது சென்னை கவர்மெண்டார் தென்னிந்தியாவில் வசித்துவரும் ஸௌராஷ்ட்ரப் பிராமணர்களாகிய நம்மை இப்பொழுது நடக்கப்போகும் சீர்திருத்தசட்டசபை எலக்ஷன்
டில் பிராமணரல்லாதாருடன் சே
கவர்மெண்டு உத்தரவு பிரகாரம்

திரிகைகளின்மூலம் முதல் முதல் பார்த்தபொழுதெனக்குண்டான ஆச்சரியத்திற்கும் வருத்தத்திற்கும் அளவில்லை.

அப்பால்ஸௌராஷ்ட்ரசபையினதாரிலும்இன்னும்ஸௌராஷ்ட்ரப்பிராமணர்களின் பலசபைகளினதாரிலும் மீட்டிங்குகள் கூடி கண்டனங்கள் செய்து தீர்மானங்களை நிறைவேற்றிச் சென்னைகவர்மெண்டாருக்கு அனுப்பினார்கள். அவைகளுக்குப் பதிலாக பிரஹ்மஸ்ரீ கெ. வி. இராமச்சாரியார் அவர்களுக்கு அடியிற்கண்ட விபரப்படிக்குள்ள மேன்மைதங்கிய கவர்னர் அவர்களின் பதிலும், ஸௌராஷ்ட்ரசபை காரியதரிசி அவர்களுக்கு அடியிற்கண்ட விபரப்படிக்குள்ள சென்னை கவர்மெண்டாருடைய ஒருபதிலும் கிடைத்திருக்கிறது.

பிரஹ்மஸ்ரீ கெ.வி. இராமச்சாரியார் அவர்களுக்குக் கிடைத்தபதில்

Private Secretary,

MADRAS.

No. A-252-I

Government House,

Ootacamund, 6th July 1920.

Sir,

In reply to your letter of the 28th June, I am to say that His Excellency does not think that any useful purpose would be served by receiving a deputation of the Sourashtras. He is particularly anxious that the members of the community should not imagine that the Government Order in any way affects the religious status of the community, ... is not concerned. The ob- ... deal with a difficulty that ... rules: it does not say that

Sourashtras are either Brahmins or Non-Brahmins; it merely says that for purposes of coming election they will be classed along with the Non-Brahmins.

M.R.Ry. K. V. Ramachari Avl., Yours truely,
Lakshmi Vilas, Madura. (Signed)

ஸௌராஷ்ட்ரசபை காரியதரிசிக்கு கிடைத்தபதில்

## GOVERNMENT OF MADRAS.

---

Public Department,

(Reforms).

Memorandum No. 609-IR.

---

The Honorary Secretary of the Sourashtra Sabha Madura, is informed that the Government regret that they cannot revise their decision that for the purpose of the forthcoming Election the Sourashtras are to be classed with the non-Brahmins.

Ootacamand, Dated, 8th July 1920 } (By order) (Signature) Under Secretary to Govt. Reforms.

---

அதில் இப்பொழு
து நடக்கப்போகும் சட்டசபை எலக்ஷன் சம்மந்தமாக மட்டுமே
உங்களை பிராமணரல்லாதாருடன் சேர்த்திருப்பதாகவும் அதைத்
தவிர உங்களை பிராமணரென்றாவது அல்லாதாரென்றாவது தீர்மா
னிக்க நாம் வரவில்லையென்றும், அப்படி மதசம்மந்தமான விஷய
ங்களைத் தீர்மானிக்க நமக்குப் பாத்தியமுமில்லையென்றும் டெபு
டேஷன் வருவதினால் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாதென்
றும் தெரிவித்ததோடு உங்களுடைய கோரிக்கைப்படி திருத்த

முடியாதென்றும் இப்படிப்பதில் சொல்ல நேரிட்டதைப்பற்றி வருந்துவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

மேற்சொன்ன விஷயங்களிருந்து கவர்ன்மெண்டார் நம் வகுப்பினரை பிராமணரல்லாதார் கக்ஷியில் சேர்த்திருப்பதானது ஏதாவது ஒருகக்ஷியில் சேர்த்துத்தீர வேண்டுமென்ற அவசியம் நேரிட்டுச் செய்ததாகக் காண்கிறது. நம் வகுப்பினரை எந்தக்கக்ஷியில் சேர்த்தாலும் அவர்களுக்கு ஒருவித வித்தியாசமுமில்லாதவரையில் அவர்கள் நம்மையேன் நாம் சொல்லுகிறபடி பிராமணர்கக்ஷியில் சேர்க்கக்கூடாது? பிராமணர்களை பிராமணர்களுடன் சேர்க்கவேண்டுமேதவிர பிராமணரல்லாதாருடன் சேர்க்க ஒருவித நியாயமும் கிடையாது. ஒருக்கால் தங்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டதாக வைத்துக்கொண்டாலும் அந்த சந்தேகத்தை அதற்குரியவர்களாகிய எங்களைக்கேட்டு சந்தேக நிவர்த்திசெய்துக்கொள்ள வேண்டுமேதவிர தாங்களாகவே தங்களிஷ்டப்படிச் செய்வது எவ்விதத்திலும் பொருந்தாத விஷயம். இதற்கு சந்தேகமே காரணமானால், ஒருமரத்தின் சல்லிவேரை வேண்டிய ஒருவன் முழுமரத்தையே அசைத்துப்பார்க்கப் பிரயத்தனப்படாததுபோல, பூராஜாதியாரைப்பற்றி ஒருவித அபிப்பிராயமும் சொல்லமுயலாமல் யார் யார் சட்டசபை அங்கத்தினராகும்பொருட்டு அபேக்ஷகர்களாக நிற்கிறார்களோ அவர்களைமட்டுமே பிராமணரா பிராமணரல்லாதாரா வென்று கேட்டுவிட்டால் அவர்கள் தங்களை இன்னாரென்று சந்தேகமறச்சொல்லிவிடக் கூடுமல்லவா! அப்படிச் செய்துவிட்டால் ஒருஜாதியாரைப்பற்றி தாங்களாகவே ஒருதலைப்பக்ஷமாய் தீர்மானிக்க இடமிராதல்லவா!

மேற்சொன்ன இத்தியாதி காரணங்களைக் கொண்டு கவர்ன்மெண்டார் ஜூன் ௫-உயில் நம் விஷயமாய்ப் பிறப்பித்திருக்கும் உத்தரவை உடனே ரத்துசெய்துவிடவேண்டும். அப்படிச் செய்யாத பக்ஷத்தில் "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்பதற்கிணங்க இப்பொழுது பிறப்பித்துள்ள உத்தரவானது மாற்றப்படு

ம் வரையில் எந்த ஸௌராஷ்ட்ரபிராமணனும் மனவமைதியுடனிருக்க முடியாதென்பதும், நாம் எடுத்த காரியம் சித்தியாகும்வரையில் முயற்சித்தே தீருவோமென்பதும் திண்ணம்.

## கைத்தொழில்

சகோதரர்களே!

கைத்தொழில் விஷயமாக உங்களுக்கு நான் சிறிது சொல்ல விரும்புகிறேன்.

ஓர் நாடு மேன்மையடைய முக்கிய சாதனமாகவிருப்பது கைத்தொழிலே. உலக சரித்திரத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமானால் இவ்வுண்மை வெள்ளிடை மலைபோல் விளங்கும். தற்காலத்தில் நாகரீகமடைந்த தேசங்களெனக் கருதப்படும் மேனாடுகள் எதனால் இப்போதுள்ள உன்னத பதவியை யடைந்திருக்கின்றது? இந்தக் கைத்தொழிலால்தான் என்பதற்குச் சந்தேகமும் உண்டோ! இனி நாம் உபயோகித்துவரும் சாயமும், சாயப்பவுடர்களும் இங்கிலாந்து ஜெர்மனி முதலிய தேசத்தவர்களின் கைத்தொழிலல்லவா! இன்னும் இயற்கையாகவே பூமி விளைவித்துக் கொடுக்கின்ற இரும்பாலும், நிலக்கரியாலும் அரிய பெரியஇயந்திரங்கள் செய்யும் கைத்தொழிலாலன்றோ நம்மை யாள்வோராகிய ஆங்கிலேயர் மேன்மையடைந்ததற்குக் காரணமாகவிருக்கிறது! கீழ் நாடாகிய ஜப்பான்தேசமும் வெகு சொற்ப காலத்திற்குள் உன்னதபதவியை யடைந்தது இக்கைத் தொழிலால்தான். எதற்காக நான் இவ்வளவு உதாரணங்களை உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேனென்றால் கைத்தொழிலே கோரியதைக்கொடுக்கும் கற்பக விருக்ஷம் போன்றதாயிருக்கிற தென்பதை விளக்கவேயாகும்.

சகோதரர்களே!

நாமெல்லோரும் சாத்வீகத்தொழிலாகிய கைத்தொழிலையே ஆதாரமாகக் கொண்டிருப்பவர்கள், ஒருவருக்கும் இன்னல் விளைவிக்க எமது தொழில் இடந்தாராதது. மெய்வருந்தப் பாடுபட்டு

அதனல் வரும் ஊதியத்தையே உண்டுவருகிறவர்கள். இத்தகைய வகுப்பில் நான் ஒருவனுயிருப்பதுபற்றி மிக்கபெருமையடைகிறேன். தென்னிந்தியாவிலுள்ள நானு ஊர்களிலும் மதுரைமாநகரமானது தனது கைத்தொழிலால் மேன்மையடைந்து தன் பெயரை பிரகாசிக்கச் செய்திருக்கிறது. மதுரைமாநகரில் தயாரிக்கப்படும் சாயச்சுன்னடிச் சேலைகளென்ன, சுன்னடி கட்டாத சாதாச்சேலைகளென்ன, சாயநூல்களென்ன, இதுகளைக்கண்டாலே கண்களில் ஒற்றிக்கொள்வாரும் உளரென்றல் உங்கள் கைத்தொழில் திறமையை என்னென்று புகழ்வது! தவிர புராதனகாலம் தொட்டு மெல்லிய நூலினுலும் ஜரிகையினுலும் நெய்யப்பட்ட வஸ்திரங்களால் மதுரைமாநகரும், ஜரிகை கலந்த தலைக்குட்டைகள் நெய்யும் திறத்தால் பெயர்பெற்ற திண்டுக்கல்லும், பட்டு சம்மந்தமாகக் கைத்திறத்தைக்காட்டவல்ல சேலம், தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய ஊர்களும் மேன்மையடைந்தது உங்கள் கைத்தொழில் திறமையாலன்றே! கைத்தொழிலானது பாவமற்ற தொழிலென்றும், எவ்விதத்தாலும்பிறரைத் துன்பத்திற்குள்ளாக்காததென்றும் பாரமார்த்தத்திற்கு யாதொரு இடையூறுமில்லாததென்றும் தெரிந்தன்றே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் இந்த தொழிலைக் கைக்கொண்டார்.

அன்பார்ந்த சகோதரர்களே!

நாம் பற்றியிருக்கும் தொழிலானது யாவராலும் எக்காலத்தும் குறை கூறப்படாதது. இதனுலேயே நாம் மேன்மை அடையவேண்டும். அப்படி நாம் மேன்மையடைவோமோவென்ற ஐயப்பாடு உங்களுக்கு வேண்டுவதில்லை. இவற்றில் சிற்சில சீர்திருத்தங்கள் செய்யப்பெற்றால் இதிலிருந்து நாம் ஏன் மேன்மையடையமுடியாது? இனி நாம் சாயத்தொழிலையும், நெய்யும் தொழிலையும் இப்பொழுது நடந்துவரும் முறையிலல்லாது, புது முறையில் அமைக்க முயலவேண்டும். அதாவது பலபேர்கள் சேர்ந்து ஜாயின் [illegible] கம்பெனிகளாக ஏற்படுத்தி அதன்மூலம் பொருந்

தகையான முதல்களைவைத்து இயந்திரங்களின் உதவியைக்கொண்டு சாயத்தொழிலையும் நெய்யும் தொழிலையும் அமைக்கவேண்டும். இப்பொழுது நடந்துவரும் தொழில் முறையினால் உண்டாகக்கூடிய சரக்குகள் தேவைக்குப் போதியதாயில்லையென்பது மேனாடுகளிலிருந்து சாயநூல்கள் இங்குவந்து செலவாகிக் கொண்டிருப்பதிலிருந்து நன்குவிளங்கும். மேற்சொல்லிய இயந்திரமுறையில் நாம் சரக்குகளைத்தயாரிப்போமானால் மிகுந்த இலாபமுமடைவதோடு மேனாடுகளிலிருந்து வந்துகொண்டிருக்கும் சாயநூல்களையும் வராமற்றடுக்க முடியும். நமது மார்க்கட்டோ வெகு விஸ்தாரமாகயிருக்கிறது. அப்படியிருந்தும் இதுவரையில் நாம் சரக்குகளை ஏராளமாய் உண்டாக்குவதில் பிரயத்தனப்படாமல் இருந்துவிட்டதானது நிரம்பவும் விசனிக்கத்தக்க விஷயமாகும்.

மேற்சொல்லிய புதுமுறைகளை அனுஷ்டிப்பதற்கு, நெய்யும் தொழிலிலும் சாயத்தொழிலிலும் கைதேர்ந்த ஒருவர் நமக்கு வேண்டியதவசியம். இங்கிலாந்து சென்று மேலேகண்ட சாயம் போடுதல் நெய்யுதல் முதலிய தொழில்முறைகளைச் சாங்கோபாங்கமாகக்கற்றுவல்ல ஒருவர் நம்முன் இருக்கிறாரென்பது உங்களுக்கு தெரிந்தவிஷயம். சரியான சந்தர்ப்பத்தில் அப்பேர்ப்பட்ட ஒருவரை நமக்குத் தந்ததானது கடவுளின் அருளேயல்லவா! அம்மகான் யாரென்றால் இந்த மகா நாட்டிற்கு பிரெஸிடெண்டாக வீற்றிருக்கும் பிரஹ்மஸ்ரீ எம். வி. சீதாராம் அவர்களே யாவார். அவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி சுமார் இரண்டுவருடங்களுக்கு மேலாகியும். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கழுபவன் போல, அவருடைய உதவியை நாம் நாடாமலிருப்பதிலிருந்து நம் ஒற்றுமைக்குறைவையும் அசிரத்தையையும் காட்டவில்லையா? போனது போகட்டும். இதுவரையில் தூங்கிக்கொண்டிருந்த தூக்கத்தினின்று விழித்துக்கொள்ளுங்கள். மேற்சொல்லிய ஸ்தாபனங்களை ஸ்தாபிக்கல் நம் அக்கிராசனாதிபதியவர்களுடைய சிறந்த

ஊழியத்தை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். அப்படிச் செய்வீர்களானால் நீங்கள் ஜெயமடைவது நிச்சயம். முன்னேறுவதும் நிச்சயம். யாவராலும் மதிக்கப்பெறுவதும் நிச்சயம்.

## வியாபாரம்.

சகோதரி, சகோதரர்களே!

இதுவரை கைத்தொழில் விஷயமாகச் சொல்லிவந்தேன். இப்பொழுது வியாபார விஷயமாய்ச்சிறிது சொல்லுகிறேன்.

வியாபாரம் என்பது மேற் சொல்லிய கைத்தொழில்களினால் உற்பத்தியாகும் சாமான் அல்லது சரக்குகளை விற்பதும் வாங்குவதுமாகும். இந்த வியாபாரமே உலகுக்கு ஒரு பெரிய பூஷணமாக விளங்குகிறது. வியாபாரத்தைத் தவிர வேறெதினாலும் உலகோர் லௌகிக சம்மந்தமாக உஜ்ஜீவிப்பதற்கும் பெரும்பாலும் முடியாத காரியம். வியாபாரத்தை தவிர வேறெதினாலும் செல்வ விருத்தியில் அதிக மேன்மையடைய முடியாது. இதற்குத்திருஷ்டாந்தமாக மேனாட்டாரையும் இந்தியரையும் எடுத்துக்கொள்வோம். மேனாட்டார் எந்தமுறையில் தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்து மேன்மை யடைந்திருக்கிறார்களென்று கவனிக்குமளவில், அவர்கள் முதலில் தொழிற்கல்வி, வியாபாரக்கல்வி பொதுக்கல்வி முதலிய கல்விஸ்தாபனங்களை ஏற்படுத்தினர்கள் ஏற்படுத்தி அதிலுள்ள இரகசியங்களைச் செவ்வனே தெரிந்துகொண்டார்கள். உலகம் பூராவையுமே தங்கள் மார்க்கட்டாக்கிக் கொண்டார்கள். தங்கள் வியாபாரத்திற்கு தங்கள் தேசத்தைமட்டுமே ஆதாரமாகக்கொண்டு இருந்துவிடாமல் உலகத்திலுள்ள எல்லாபாகங்களுக்கும் சென்று, ஆங்காங்கு நடந்துகொண்டிருக்கும் வியாபாரத்தைக் கவனித்தும் வியாபார ஸ்தலங்களை ஸ்தாபித்தும் அவ்வவ்விடங்களிலகிடைக்கும் மூலப் பொருள்களை (Raw Materials) வாங்கி தங்கள் தங்கள் நாடுகளுக்கனுப்பியும் அவ்வவ்விடங்களுக்கு எந்தெந்த சாமான்கள் தேவை யென்பதைத் தெரிந்து அதற்கேற்றவாறு தங்கள் நாடுகளில் சாமான்களைச்செய்து பிறநாடுகளில் கொண்டு போய் விற்க

வும் செய்தார்கள். இப்படிச்செய்ததிலிருந்து அவர்கள்வியாபாரத்தில் ஜாஸ்திவிருத்தியடையநேர்ந்ததுவாயிற்று. நம்இந்திய நாட்டாரோ அதற்கு நேர்விரோதமாக மேலேகண்ட தொழிற்கல்வி,வியாபாரக்கல்வி முதலியவைகளைக்கவனியாமலும்,அன்னியநாடுகளுக்குச்செல்வதினல் ஏற்படும் நன்மைகளை உணராமலும் இருந்துவிட்டார்கள். சிறிது காலத்திற்கு முன்வரையில் சமுத்திரயாத்திரையே செய்யக்கூடாதென்று ஓர் துரதிருஷ்டவசமான கொள்கையை இவர்கள் அனுஷ்டித்து வந்தார்களென்றால் இவர்களுடைய வியாபாரமானது விருத்தியடையாததுஒரு ஆச்சரியமல்ல.நிகழ்ந்ததைக்குறித்து விசனப்பட்டுக் கொண்டிருப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. இனி நாம் செய்ய வேண்டியது இன்னதுயென்பதைச் சற்று கவனிப்போம்.

சகோதரர்களே!

நம் இந்திய நாடானது நானாவித (Raw Materials) மூலப் பொருள்களுக்குப் பிறப்பிடமாயிருக்கிறது. எனினும் அவற்றை உபயோகிக்கத்தெரியாத தோஷத்தால் அன்னிய நாட்டார் அவைகளைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம் இந்தியாவிலிருந்துக்கொண்டு போன சாமான்களைத் தொழிற்படுத்தி நமக்கே அனுப்புகிறார்கள். அதை மறுபடியும் ஒன்றுக்கு பத்துவிலை கொடுத்து நாமே வாங்குகிறோம். நாமே அம்மூலப்பொருள்களைத் தொழிற் படுத்தத்தெரியாததாலன்றோ இவ்வித நஷ்டங்களுக்குள்ளாக வேண்டியிருக்கிறது! இனிமேலாவது நம் இந்தியா அவ்வித நஷ்டங்கள் அடையாமல் இங்குகிடைக்கும் (Raw Materials) மூலப்பொருள்களை இங்கேயேதொழிற்படுத்தமுயலவும் அதற்கனுகுணமானகல்வி ஸ்தாபனங்களையெல்லாம்ஏற்படுத்தவும்வேண்டும். அக்கல்வியபிவிருத்தியின் மூலமாய்த்தொழிலையும்வியாபாரத்தையும் பெருக்கிக்கொள்ளவேண்டும். முன்போல நாம் இருந்த இடத்திலேயேயிருந்துவிடாமல் அன்னிய நாடுகளுக்கும் சென்று அவர்களுடன் வியாபாரசம்பந்தம்ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவையாவையும் குறைவின்றி செய்துவிட்டால் நம் இந்தியாவானது முன்னேற்றமடையும் ஒருவித சந்தேகமும் கிடையாது.

சகோதரர்களே! நீங்கள் மேற்சொல்லிய கொள்கைகளை யனுசரித்து வியாபாரத்துறைகளில் அதிகசிரத்தையுடன் வேலை செய்துவரவேண்டும் விசேஷமான முன்னேற்றம் நாம் அடைய வேண்டுமானால் ஒற்றுமையென்னும் சாதனத்தை முக்கியமாய்க் கைக்கொள்ளவேண்டும். இந்தஒற்றுமையானதுநம் முள் பரவிவிடுமானல் நம்மவர்கள் நிச்சயமாய் உன்னத பதவியையடைந்து விடுவார்கள்.

வியாபாரமென்பது நம்மெளராஷ்ட்ரப் பிராமணர்களுக்குள் சுமார் இருபது வருடகாலத்திற்கு முந்தியவரையில் ஜவுளி வியாபாரமும், ஜரிகை வியாபாரமும் சிறிய அளவில் நடந்துக்கொண்டு வந்தது. இப்பால் கொஞ்சம் கொஞ்சமாக அதேவியாபாரம் விருத்தியடைந்துவந்ததோடு சாயநூல் வியாபாரமும் துவக்கப்பட்டது. தவிர நம்மவர்களில்பலர் பிறநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் நூல் வியாபாரமும் செய்ய ஆரம்பித்தார்கள். இவைகள் தினே தினே விருத்தியடைந்து வருகிறது இனி பூரண விருத்தியடைய வேண்டுமானல் தனித் தனி அவரவர்களுக் கேற்ற வியாபாரங்கள் செய்து வருவதோடு ரெஜிஸ்டர் செய்யப்பட்ட லிமிடெட் கம்பெனிகளையும் ஏற்படுத்தி பெருத்த அளவில் வியாபாரங்கள் நடத்தப்பிரயத்தனங்கள் செய்யவேண்டும். அப்படிச் செய்தாலன்றி பிறநாடுகளில் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தவும், பிறநாட்டாரோடு வியாபார சம்பந்தம் வைத்துக்கொள்ளவும் அநுகூலமாயிராது.

சகோதரர்களே!

இன்னொரு முக்கியமான விஷயம் உங்களுக்குச்சொல்ல விரும்புகிறேன் அதாவது நம் சாயத் தொழிலுக்கு அத்தியாவசியமாயிருப்பது கந்தகத்திராவகம். அது இதுவரை வெளிநாடுகளிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. சுமார் இரண்டு லக்ஷரூபாய் முதல் வைத்து ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவோமானல் மேற்படி திராவகத்தை இங்கேயே ஏராளமாய் உற்பத்திசெய்யலாம்

விலையும் சல்லீசாக அடங்கும். அதிலிருந்து Turkey Red Oilம் வயல்களுக்கு மிகுந்த கொழுமையைத்தரக்கூடிய எருவான எலும்புப்பொடி உரங்களும் தயாரிக்கலாம். இது நாம் உடனே கவனிக்க வேண்டிய விஷயம்.

## கல்வி.

சகோதரர்களே! முந்திய பாராக்களில் ஜாதி முன்னேற்றத்திற்கு முக்கிய சாதனங்களாகயிருப்பவை கைத்தொழில், வியாபாரம் முதலியன என்று சொல்லிவந்தேன். ஆனால் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பதும் முன்னேற்றத்திற்கு அதிசூக்ஷ்மமானதுமான சாதனம் ஒன்றிருக்கிறது. அதுகல்வியேயாகும். கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை” யென்று நீதிநெறிவிளக்கம் கூறுகிறது. அதாவது மானிடராகிய நமக்கு அறம்பொருள் இன்பம் வீடு யென்னும் சதுர்வித புருஷார்த்தங்களை உற்றதுணையாயிருந்து பெறச் ,செய்வது கல்வியேயல்லாது பிறிதன்றென்பதாம். செல்வம் இருவகைப்பட்டது அவைகல்வியும் பொருளுமாம். இரண்டாவதாகிய பொருட் செல்வம் இம்மையில் மாத்திரம் சுகந்தருவதாயும் பொதுவாக பாரமார்த்தத்திற்கு இடையூறாகவும் கருதப்படுகிறது. கல்விச்செல்வமோ அவ்வாறின்றி இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைத் தருவதாயிருக்கிறது ஆகையால் கல்விகற்க வேண்டியது அத்தியாவசியமென்றேற்படுகிறது.

கைத்தொழில் வியாபாரம் என்றதுபோன்றவைகள் சகலரும் கோரிநிற்கும் உன்னதநிலையாகிய செல்வப்பெருக்கு நிலையையடைவதற்கு நம்மெவ்வொருவரையும் இட்டுக்கொண்டு செல்லும் சாதனங்களாயமைகின்றன ஆனால் கல்வியெவ்வாறிருக்கிறதென்றால் கட்டிச்சாதத்தை யொத்திருக்கிறது அதாவது முக்கிய ஆதாரமாகவிருக்கிறதென்பதே கட்டிச்சாதத்துடன் நெடுந்தூரம் பிரயாணஞ்சென்ற ஒருவன் வெகுஇலேசாயும் மனமகிழ்ச்சியுடனும் வழியைக் கடப்பன். அதுபோல் கல்வியை இந்த சிற்றுயிர்க்கு உற்றதுணை யெனக்

கொண்டுளோர் வாணாளாகிய பிரயாணத்தை வெகுசுலபமாகக்கழிப்பர் என்பதாம். அவர்களைப்பார்த்தாலும் மலர்முகத்தோடு கூடியிருப்பர். அப்பேர்ப்பட்டவரையே முகத்தில் வாஸ்தவத்தில் கண்கள் உடையவரை அறிவாளிகள் நிரம்பிய உலகம் கூறுகின்றது. மற்றையோரை கண்களிருந்தாலும் முகத்திலிரண்டு நீராவேதனையோடு கூடிய புண்கள் உடையவராகப் பாவிக்கின்றது. இதையே வள்ளுவரும் கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர்க்கல்லாதவர் என்று ஆன்ற அனுபவத்தின்பேரில் உரைத்துள்ளார்.

இவ்வாறு கண்ணிற்கு ஒப்பாகக் கூறப்பட்டிருக்கும் கல்வியானது நம்மவர்களுள் மிகக்குறைவாகவேயிருந்து வருகிறது என்பதை நினைக்க விசனமுறுகின்றேன். சென்ற 1911ம் வருஷத்திய ஜனத்தொகை ரிப்போர்ட்டைப்பாருங்கள். சென்னை இராஜதானியில் நானாவூர்களிலும் வசித்துவரும் நம்மவரின் ஜனத்தொகை மொத்தத்தில் 92840 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதில், 45444 பேர் புருஷர்கள். 47396 பேர் ஸ்திரீகள். இனி இந்தத்தொகையில் எத்தனைபேர் படித்தவர்கள் என்பதும், தென்னிந்தியாவில் கல்வியில்சிறந்துவிளங்கும் தமிழ்ப் பிராமணர்களைக் காட்டிலும் நாமெவ்வளவு பின்னடைந்திருக்கிறோமென்பதும் அடியில் வரைந்திருக்கும் அட்டவணைக் குறிப்பிலிருந்து வெகு ஸ்பஷ்டமாய் விளங்கும்

| ஜாதி | மொத்த ஜனத்தொகை | ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|---|---|
| | | படித்தவர் | ஆங்கிலம் | படித்தவர் | ஆங்கிலம் |
| தமிழ் பிராமணர்கள் | 480063 | 171616 | 53130 | 28951 | 684 |
| ஸௌராஷ்ட்ர பிராமணர்கள் | 92840 | 15050 | 765 | 438 | 8 |

தமிழ் பிராமணர்களில் படித்தவர்கள் ஆண் பெண் இருபாலாரும் சேர்ந்து 100க்கு 50க்கு மேல் இருக்கிறார்களென்றால் நம்மவர்களில் 100க்கு 16 பேர்தானிருக்கிறார்கள். ஆகையால் ஸகோதரர்களே! நாம் கல்வி விஷயத்தில் மிகவும் பின் தங்கியிருக்கிறோம் என்பது நீங்களெல்லோரும் உணருகிறீர்கள். இந்தக்குறையைக் கண்டறிந்ததால் தான் நமது பிரமுகர்கள் பிரயத்தனங்கள் அநேகஞ் செய்து இன்னும் கேவலமாகவிருந்த எமது நிலைமையை இம்மட்டிற்காவது கொண்டுவந்து வைத்தார்கள்.

### நம்மவர்களின் கல்வி ஸ்தாபனங்கள்.

ஸகோதரர்களே! காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ கந்தாடை ரங்காராஜ பாகவதருடைய நன்முயற்சியின்பேரில், அவரும் இன்னும் மற்ற பிரமுகர்களும் ஒரு கமிட்டியாகச்சேர்ந்து 1896ம் வருஷத்தில் இராமநாதபுரம் ரஸ்தாவிலிருந்த தொப்பைச்சத்திரத்தில் ஓர் பிரைமரி பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார்கள். அப்பால் சிறிது காலத்திற்குப்பின் நவாபத்கான் தெருவில் டிஸ்டிரிக்ட் போலீஸ் ஆபீஸாயிருந்த திருமலை நாயக்கர் காலத்திய ஓர் பழைய கட்டமானது இடிக்கப்பட்டபின்பு காலி இடத்தை மட்டும் சர்க்காரி(லி)ருந்து விலைக்கு வாங்கி அப்பொழுதிய தேவைக்குத் தகுந்தபடி கட்டடங்கட்டி தொப்பைச் சத்திரத்தில் இருந்த பள்ளிக்கூடத்தை இந்தப் புதுக்கட்டடத்திற்கு மாற்றினார்கள். இந்தப்பள்ளிக்கூடமானது கிரமமாக நடந்துவருங்காலத்தில் பிரைமெரி பள்ளிக்கூடத்தில் அமையப்பெற்றிருந்த நான்காவது வகுப்பு வரையில் குழந்தைகள் படித்துவிட்டு அநேகமாய் அதோடு படிப்பை நிறுத்திவிடுவதைக்கண்ட மேற்படி கமிட்டியார் 1898ம் வருஷத்தில் இதை லோயர் ஸெக்கண்டெரி பள்ளிக்கூடமாக்கிவிட வேண்டுமென்ற எண்ணங்கொண்டார்கள். அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு இந்தப் பிரைமெரி ஸ்கூல் கட்டடமானது போதியதாயிருக்கவில்லை. அப்பொழுது நமது ஸௌராஷ்ட்ர சபையானது ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வந்தது. மேற்படி ஸௌராஷ்ட்ர சபையின் ஆதர

வில் அதே வருஷத்தில் ஒரு லோயர் செக்கண்டெரி ஸ்கூலை ஐந்தாவது வகுப்பு முதல் ஆரம்பித்து 1900ம் வருஷத்தில் லோயர் செக்கண்டெரி ஸ்கூலாக முற்றுப்பெறச் செய்தார்கள். அதாவது ஏழாவது வகுப்புவரை பூர்த்தி செய்தார்கள். அப்பால் 1901ம் வருஷத்தில் இப்பொழுது ஹைஸ்கூல் இருந்துவரும் கட்டடத்தை விலைக்கு வாங்கினார்கள். பின்பு மாட்சிமைதங்கிய ஏழாம் எட்வர்ட் சக்கிரவர்த்தியாரின் பட்டாபிஷேக காலமாகிய 1903ம் வருஷம் ஜனவரிமீ 1உயன்று ஸௌராஷ்ட்ர சபையார் லோயர் செக்கண்டெரி ஸ்கூலாகவிருந்ததை ஹைஸ்கூலாக்கினார்கள். அப்பால் சில வருஷங்களுக்குப்பின் ஹைஸ்கூலுக்குப் போதியவளவு மூலதனம் இருந்தாலொழிய பள்ளிக்கூடம் சரிவர நடந்து வராது என்ற எண்ணங்கொண்டவர்களாய் 1909ம் வருஷத்தில் ஸௌராஷ்ட்ர கனதனவான்களிடமிருந்து ரூ 25000 வசூலிக்கப்பட்டு பெர்மனெண்ட் பண்டாக வைக்கப்பட்டிருக்கிறது. அதோடுகூட நம் ஸௌராஷ்ட்ரப் பிராமணர்களின் கல்வி அபிவிருத்தியின்பொருட்டு 1916ம் வருஷத்தில் பலகனதனவான்களுடையநன்முயற்சியின்பேரிலும் பணவுதவியின் பேரிலும் ரூ 40000க்கு முனிசிபாலிட்டியாரிடமிருந்து முன் மதராஸ் பாங்க் இருந்த இடத்தையும் கட்டடத்தையும் வாங்கினார்கள். அதில் ஒரு பெரியதும் கம்பீரமானதுமான ஹைஸ்கூல் கட்டடம் கட்டுவதற்காக 1½லட்சரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டுக்கட்டடமும் நடந்து வருகிறது. பல கனதனவான்கள் பெருந்தொகைகளாகக் கட்டடங்கட்டுவதற்கு உதவி செய்தும் வருகிறார்கள். அதோடுகூட மொத்தத்தில் பிடிக்கும் செலவில் பாதித் தொகையை நமது சென்னை கவர்ன்மெண்டார் கிராண்ட்டாகக்கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

## தேசீயக்கல்வி

நேயர்களே! இப்பொழுது நமது ஜாதியாரின் தேவைகளுக்கும் அபிவிருத்திக்கும் இந்தக் கல்விமுறையானது போதியனவாயில்லை. ஏனெனில் முக்கியமாய் நமக்குத்தொழிலையும் வியாபாரத்தையும் கற்பிக்கும்படியானகல்வியேதேவையாயிருக்கிறது அதற்கு அனுகுண

மாக நாம் ஒரு தேசீயகல்விச்சாலையை ஸ்தாபிக்கவேண்டும். அதில் நம்மால் இயன்றமட்டில் பாடுபட்டு ஜாஸ்தியான மாணவர்களை சேர்த்து, கைத்தொழில், வியாபாரம், மதம் சுயபாஷை முதலியவைகளை முக்கிய மாணபாடங்களாக வைத்துக் கற்பித்து வரவேண்டும். அப்படிச் செய்வோமானால் நாம் எல்லாத்துறைகளிலும் வெகுசீக்கிரத்தில் முன்னேற்றமடைய ஹேதுவாகும். மேற்சொல்லிய விதங்களானகல்வி ஸ்தாபனங்களை யெல்லாம் இம்மதுரை மாநகரிலும் இன்னும்மற்ற நம் ஸௌராஸ்ட்ரப் பிராமணசகோதரர்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊர்களிலும் அவ்வவ்விடங்களுக்கேற்ப ஸ்தாபித்து முன்னுக்குக்கொண்டுவருவார்களென்று நம்புகிறேன்.

பெண்கல்வி

சகோதரர்களே சீமாட்டிகளே!

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்மெஸ்ஸர்ஸ் கெ. என். பி. நன்னுசாமி பாகவதர் அன்பிரதர்ஸ் அவர்களால் இரண்டுபெண் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு அவைகள் இதுவரையில் செவ்வனே நடத்து வருகின்றன. அந்த இரண்டு பள்ளிக்கூடங்களிலும் நான்காவது வகுப்புவரை கற்பிக்கப்பட்டு வருகிறது. இது விஷயத்தில் மேற்படி மெஸ்ஸர்ஸ் கெ. என். பி நன்னுசாமி பாகவதர் அன்பிரதர்ஸ் அவர்களுக்கு நாமெல்லோரும் வந்தனம்செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். இந்த இரண்டு பள்ளிக்கூடங்களால் நம் பெண்பாலர்க்கு எவ்வளவு நன்மை யேற்பட்டிருக்கிற தென்பதை யாவரும் அறிவார்கள். எனினும் இந்தப் பதினைந்து வருஷகாலமாய் பெண கல்வியை விருத்திச்செய்துகொண்டுவரவேண்டுமென்ற எண்ணம் நம் பொதுஜனங்களுக்காவது முக்கியமாக நம்ஸௌராஷ்ட்ரசபைக்காவது ஜனிக்காதது ஆச்சரியப்படத்தக்கதே! அதைபற்றிசில படித்தார் ஒருவருமில்லையென்பதே எனது துணிபு இனியும் அவ்வாறுமௌனம் சாதித்தல் கூடாது நம்முடைய சபையின் ஆதரவில் குறைந்த பக்ஷம் பத்துபள்ளிக்கூடங்களாவது மூலைக்கு மூலை ஸ்தாபிக்க வேண்டும். அதோடுநின்று விடாமல் காலக்கிரம த்தில்வகுப்புக்களை உயர்த்திக் கொண்

டேபோய் பத்துவருஷகளுக்குள்ளாவது ஹைஸ்கூல் வரையில் கொண்டுவந்துவிட வேண்டும் இதை இம்மதுரை நகரத்தார்க்கு சொன்னதாகவைத்துக்கொள்ளாமல் இதர ஊர்களில் வசிக்கும் சகோதரர்களும் இப்பெண்கல்வி விஷயத்தில் ஊக்கங்காட்டி ஒவ்வொரு ஊரிலும் பெண் பாடசாலைகளை ஸ்தாபித்து தங்கள் தங்கள் குழந்தைகளைக் கல்விகறகச்செய்து அபிவிருத்திக்குக்கொண்டுவர வேண்டுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனவான்களே! பெண்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டியது அதிமுக்கியம் எனெனில் குழந்தைகளுக்குத்தாய்மார்களாய் இருக்கும் பெண்மணிகள் கல்வி கற்றவர்களாயிருந்தால் அவர்களிடம் வளரும் குழந்தைகளுக்கு எவ்வளவு ஒத்தாசையாயிருக்குமென்பது நான் சொல்லாமலே விளங்கும் கிரகஸ்தாஸ்ரமமென்னும் ஓர் வண்டியை காதலனும் காதலியுமாகிற இரண்டு காளைகள் இழுத்துச்செல்வதாக ஒப்பிடலாம் அந்த இரண்டு காளைகளும் ஏற்றேறக்குறைய சமபலம் கொண்டதாயிருந்தால் மாத்திரம் குறிப்பிட்ட இடத்திற்கு இலகுவாய்ப்போய்ச்சேரும். அதில் ஒன்று மிக்க இளைத்ததாயும் ஒன்று வலுத்ததாயும் இருக்குமாகில் நடுவழியில் இளைத்தமாடு படுத்துக்கொள்ள வலுத்த மாடானது வண்டி பாரத்தையும் இளைத்த மாட்டையும் சேர்த்து இழுத்துச்செல்வது அசாத்தியமல்லவா! அதுபோலத்தானே நம் குடும்பவாழ்க்கையும் ஆகையால் சகோதரர்களே! பெண்கல்வி விஷயத்தில் அக்கரை கொள்ளுங்கள் பெண் கல்வியை முன்னுக்குக் கொண்டுவாருங்கள் பெண் கல்வியையும் ஆண் கல்வியையும் ஒருகாலத்தில் சமநிலைக்குக் கொண்டு வரப்பிரயத்தனப்படுங்கள்

## பொருளுதவி

சகோதரர்களே! மேலே சொல்லிய பாராக்களில் நம்மவர்களின் அபிவிருத்தியின் பொருட்டு கல்வி ஸ்தாபனங்களையும் இன்னும் தேசியக்கல்வி பெண்கல்வி முதலியவைகளையும் ஏற்படுத்த வேண்டுமென்று வெகு இலேசாகச் சொல்லிவிட்டோம் அவைக

ளுக்கெல்லாம் பண உதவி முக்கியமல்லவா! அந்தப்பணத்தை எப்
படிச்சேகரிப்பது என்ற விஷயத்தில் அடியிற்கண்டவாறு நான்
அபிப்பிராயப்படுகிறேன்.

1. நம் ஸௌராஷ்டிரப் பிராமணர்கள் வசிக்கும் ஒவ்வொரு
ஊர்களிலும் வியாபாரத்தின்பேரில் மஹிமை ஏற்படுத்தி வசூலிக்
கப்பட்டு வருகிறதாகவே எண்ணுகிறேன். சில ஊர்களில் அப்படி
யில்லாதிருந்தாலும் அந்த ஊர்களிலும் மஹிமையென்ற ஏற்பாட்
டைச் செய்துகொள்வது அவசியம். இந்த மதுரைமா நகரில்
மஹிமை என்ற ஏற்பாடானது வெகுகாலமாகயிருந்தும் கனதன
வான்கள் சரியானபடி மஹிமை கொடாமலிருந்து வருகிறார்கள்.
இனியும் அப்படிக்கிராமல் சரியானபடி கொடுத்துவரவேண்டும்.

2. நம்மவர்கள் கலியாணங்கள் செய்வதில் வீண்படாடோப
மான சிலவுகள் சிலதை நிறுத்தி அதை இந்தக் கல்விஸ்தாபனங்
களுக்குக் கொடுக்கவேண்டும்.

3. ஒரு குடும்பத்தில் நான்கு சகோதரர்களிருப்பதாக வைத்
துக்கொள்வோம். அதோடு தருமம் என்ற ஒரு சகோதரன் தங்
களுடன் இருப்பதாக ஒவ்வொரு குடும்பத்தாரும் வைத்துக்கொண்டு
அவரவர்களுடைய சொத்துப்பிரிவினையின் காலங்களில் அந்த தர்ம
மாகிற தமையனுடைய சொத்தை ஒதுக்கி மேற்கண்ட கல்விஸ்தா
பனங்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். ஒருவருக்கு புத்ர சந்தா
னமேயில்லையென்று வைத்துக்கொள்வோம். அவர் "அபுத்ரஸ்ய
கதிர்நாஸ்தி" யென்னும் சுருதிக்கிணங்கஸ்வீகாரத்தைச் செய்து
வது புத்ரனை அடையவேண்டியது அவசியம். அப்படிச் செய்யும்
போது, தான்ஸ்வீகாரம் பெறும் ஒரு புத்திரனோடு தருமம் என்னும்
ஒரு புத்திரனும் இருப்பதாக வைத்துக்கொண்டு அந்தப்பாகத்தை
விலக்கி மேற்கண்ட கல்விஸ்தாபனங்களுக்குக் கொடுத்துவிடவேண்
டும்.

மேலே கண்ட மூன்று விதங்களையும் ஊர்ஜிதத்திற்குக்கொண்டு
வந்து அதன்படி பணம் சேகரிக்கப்படுமானால் நாம் எந்தக்காரியத்

தையும் செய்துமுடிக்க வல்லவர்களாவோம். நம்மால் முடியாத காரியம் உலகத்தில் ஒன்றிராது. நாம் அதிசீக்கிரத்தில் முன்னுக்கு வரவேண்டுமென்று எண்ணுகிறவர்களாகையால் மேற்கண்டவைகளை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவருவது அத்தியாவசியமாகும்.

## சுகாதாரம்.

சகோதரர்களே! "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". ஒரு தேசத்தையாளுவோர் தம்மால் ஆளப்படுகிற ஜனங்களுக்குக் கொடுக்கவேண்டிய செல்வம் இதுவே. சுகாதார பரிபாலன சபைகள் இதற்கு முக்கியமாக விருப்பதால் அவற்றை ஒவ்வொரு ஊர்களிலும் ஏற்படுத்தப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். சென்னைபோன்ற பெரிய நகர் சுகாதார பரிபாலன சபைக்கு கார்பொரேஷன் என்றும், அதற்கும் சிறிய மதுரையைப்போன்ற நகரில் அமைக்கப்படும் சபைக்கு முனிசிபாலிடி என்றும், அதற்குச்சிறிய திருப்பரங்குன்றம் போன்ற ஊரில் அமைக்கப்படும் பரிபாலன சபைக்கு யூனியன் என்றும் பெயர் வகுத்திருக்கிறார்கள். ஆயினும், இவற்றில் ஒவ்வொன்றினுடைய வேலையும் அளவில் வித்தியாசப்பட்டாலும் ஒன்றாகவே இருக்கிறது.

இந்த சபையின் காரியங்கள் ஜனப்பிரதிநிதிகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரதிநிதியும் தம்மைச்சேர்ந்த வார்டுகளில் சுகாதார விஷயமாய் என்னவேண்டியிருக்கிறதோ அதைக்கவனித்து அப்போதைக்கப்போது சீர்திருத்திக்கொண்டு வரவேண்டியதாகையால் இப்பதவியைப் பெறுவோர் பிறருடைய மதிப்பொன்றே தமக்குற்ற குறியாகக் கொள்ளுதல் கூடாது. தமது ஜனங்களுக்காகவும் தமது ஊருக்காகவும் உழைக்கவேண்டும் என்ற அடங்கா ஆவல்கொண்டவர்களாயிருத்தல்வேண்டும்.

பார்க்கப்போனால் சகோதரர்களே! ஒவ்வொருவருக்குமே அந்தசபையில் உட்காரவேண்டுமென்ற ஆவல் இருக்கலாம். ஆனால் ஓட்டுகொடுப்போராகிய நாம் இந்த விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாய் இருத்தல் வேண்டும். கவுன்சிலர் ஸ்தானத்தைப்பெற நிற்கும் ஒவ்வொருவருடைய குணத்தையும் அறிந்து, சுகாதார விஷயமாய் நமக்கு இவர் நன்மைசெய்வாரா என்று நன்கு பரீக்ஷை பார்த்துப் பிறகே அவருக்கே ஓட்டுக்கொடுக்கவேண்டும். இதில்

மாத்திரம் நாம் இசலவ் அபிப்பிராயம் கொள்ளக்கூடாது. எனது அத்தான் இவருக்கு நோட்டீஸ் கொடுத்தார் அதனால் நானும் தொடுத்து விட்டேன் என்று சொல்லும் காரணம் பிரயோஜனமில்லை. நமது வயிற்றுப்பசி காரியமெல்லாம் அத்தானுக்கு என்ன தெரியும்.

இதுவரையில் சகோதரர்களே! நான் பொதுவாகக் கவுன்சிலர்களை கப்போகிறோரும் அவர்களை அனுப்புவோரும் நடக்கவேண்டிய முறைகள் இவையெனச் சொல்லி வந்தேன். இனி எனது அநுபவத்தில் கண்டறிந்த மதுரைச் சுகாதாரத்தைப்பற்றியும் சிறிது ஆராய்ச்சி செய்வதும் இச்சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமென்றே நினைக்கிறேன். பொதுவாக மதுரையின் சுகாதார நிலைமை தாழ்ந்ததென்றே சொல்லவேண்டும். அதிலும் சௌராஷ்ட்ர பிராமணர்கள் வசிக்கும் பாகங்களைப்பற்றிச்சொல்லவேண்டியதேயில்லை. இத்தக்குறைபாட்டிற்கு கவுன்சிலர்கள் மாத்திரமல்லாது நாமும் சிறிது காரணமாக விருக்கிறோம். கவுன்சிலர்கள் மாதமொரு முறையாவது தங்கள் வார்டுகளைப் பார்வையிட்டு அங்கு என்ன குறைகள் இருக்கின்றனவோ அவற்றைக் கவுன்சிலில் தெரிவித்து அவற்றைத் தீர்க்கும் மார்க்கத்தைத் தேடவேண்டியது அவசியம். வருஷத்திற்கொரு முறையாவது நமது கவுன்சிலர்கள் வார்டுகளை எட்டிப்பார்ப்பார்களோ இல்லையோ சந்தேகந்தான். ஸ்தானங்கிடைக்குமட்டும் அவர்கள் நாளொன்றுக்கு பதில் முறையாவது நமது தெருக்களில் காணப்படுவார்கள். அவ்வளவு சிரத்தையைக் காட்டுகிறார்கள் தங்கள் காரியம் முடிந்தவுடன் இவர்கள் பாராமுகமாயிருப்பதற்குக் காரணமென்ன? ஒன்று அவர்கள் மும்பயோடு வேலையே தீர்ந்தாய்ப்போவதாயாவது அல்லது இவற்றை யெல்லாம் பார் போய்ப்பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணமான [illegible] காரணமாவது இருக்கவேண்டும். பொறுப்புள்ள ஸ்தானத்தில் இருந்துகொண்டு இவ்வாறு கவலையீனமாக விருப்பது சிறிதும் பொருந்தாது. நான் 1, 2, 3, முதலான தெருக்களை வசிக்கப்பார்த்துக்கொண்டால் னால் அவை இருக்கின்ற இலட்சணமும், அப்படியும் சொல்லுவதா வசதியில் சுகாதாரத்தை அனுபவிக்கிறார்களல்லாது அவ்விதம் வசதியில்லாத ஜனங்கள் வாழ்க்கையில் வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. தெருவின் இருபுறத்திலும் சாக்கடைகள் இருக்கின்றன. இருந்த போதிலும் பிரயோஜனம். அவ்வளவு கவனிக்கப்பட்டதால் இனி இருக்கவேண்டிய இடமுணர் [illegible] பள்ளமும், பள்ளமிருக்கும் இடங்களில் சாக்கடைகள் அதிகரி

றிவதற்கு முடியாமல் இருக்கிறது என்றால் அதன் கதி என்ன என்பது நாமே தெரிந்துகொள்ளவேண்டியதுதான். கைபடாமல் சுத்தமான பாத்திரத்தில் பிடித்துவைத்த குழாய்த்தண்ணீரும் ஒரு நாளுக்குமேல் அப்படியே வைத்திருந்தால் மறுநாள் வாயில் விட்டுக்கொள்வதற்கும் யோக்கியதை யற்றுப்போகும்போது, ஜலதாரைக் கழிவுநீர் எப்படியிருக்கும்? இதனால் பல வியாதிகள் உண்டாகும் என்பதிற் சந்தேகமுண்டா? இவை யெல்லாம் அப்போதைக்கப்போது கவனிக்கப்படாவிட்டால் சற்றும் பிரயோஜனமில்லை.

சகோதரர்களே! சுகாதாரக்குறைவிற்கு நாமும் சிறிது காரணமாயிருக்கிறோம் என்று அப்பொழுதே சொல்லியிருக்கிறேன். நம்முள் பலர் சுகாதார முறைகளை அறிகிறார்கள். முனிசிபாலிட்டி தக்க சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறதில்லையென்றும் உணருகிறார்கள். ஆனால் அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள அசக்தர்களாயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட எனது சகோதரர்களுக்கு நான் சொல்லும் உபாயமாவது. நீங்கள் பிரமாதமாகச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை, உங்களுக்கு முனிசிபாலிட்டியால் திருத்தப்படவேண்டிய ஏதாவதொன்று கவனிக்கப்படாமலிருப்பதாகத் தோன்றினால் உடனே உங்கள் வார்டு கவுன்சிலரைத் தேடிச்சென்று இதைத்தெரிவிக்கவேண்டும். அவர்கள் நீங்கள் சொல்லுவதைக் கட்டாயமாய்க் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மேலே சொன்னதைத் தவிர வேறொரு உபாயமும் இருக்கிறது. அதாவது வரி செலுத்துவோராகிய நாமெல்லோரும் ஆங்காங்கு சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும். சங்கத்தின் மீட்டிங்குகள் ஒரு மாதத்திற்கொரு முறை தவறாது கூடி ஆங்காங்கு இருந்து வருகிற குறைகளை மீட்டிங்கில் சொல்லிக்கொள்ளவேண்டும். சங்கத்தின் காரியதரிசி இவை யெல்லாம் குறித்துக்கொண்டு, தான் ஒருவனே எல்லாக்குறைகளையும் கவுன்சிலருக்குத் தெரிவித்துவிடலாம். இதுவே சென்னை முதலான பெரிய பட்டணங்களில் அநுஷ்டிக்கப்படும் முறை. ஆகையால் சகோதரர்களே! கூடிய சீக்கிரம் இப்பேர்ப்பட்ட சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

## உள்ளூர் குறைவுபாடுகள்

சகோதரர்களே! அனுப்பானடி வாய்க்காலானது நம் மதுரைமா நகருக்கு பெரிய தொந்திரவுக்கிடமாக இருந்துகொண்டு வருகிறது. இதுவே பல வியாதிகளுக்கு காரணமாயிருக்கிறது. இதனால் ஏற்படுகிற கேடுகள் நீங்கவேண்டுமானால் கால்வாய்க்குப்பதிலாக பெரிய குழாய்களை செடுக வைத்து அவற்றின் வழியாகத் தண்ணீர் ஓடும்படி செய்தல் வேண்டும். இப்பொழுது கால்வாயாக யிருக்குமிடத்தை ஒரு விசாலமான ரஸ்தாவாகவும் ஆக்கிவிடலாம். இதை முனிசிபாலிடியார் கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்களென்று நம்புகிறேன்.

கோர்ட்டுகளில் நமது ஸௌராஷ்ட்ர பாஷையை மொழிபெயர்த்துச் சொல்லும் ஒருவர் இதுவரையில் ஏற்படாத குறை இருந்து வருகிறது, நம்முள் பலருக்குத் தமிழ்ப்பழக்கம் குறைவாயிருத்தலால் சரியானபடி தங்கள் கருத்தை விளக்கிச் சொல்லத்தெரியவில்லை. இந்த விஷயத்தில் நமது கவர்மெண்டாரை ஸௌராஷ்ட்ர பாஷை மொழி பெயர்ப்பு ஆள் ஒருவரை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளவேண்டும்.

தற்சமயம் வியாபாரிகள் வெளியூர்களுக்கு சிப்பங்கள் ரயில் மார்க்கமாய் அனுப்ப வெகுகஷ்டப்படுகிறார்கள். கூட்ஸ்டிபார்ட்மெண்டில் சதாகூட்டம்தான். இதைத்தவிர்க்கவேண்டுமாயின் கீழ் மதுரை ஸ்டேஷனிலும் சாமான்கள் எடுக்கவேண்டும். இது விஷயமாக ஏற்பட்டிருக்கும் எல்லாவித கஷ்டங்களையும் நிவர்த்தித்துக் கொள்ள நாமெல்லோரும் ஒருங்கே கூடி தென்னிந்தியா ரயில் கம்பெனியாருக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

மதுரையிலிருந்து அனுப்பப்படும் சாய நூல்களுக்கு ரயில்வே கம்பெனியார் கூட்ஸ் சார்ஜுகளை அகாதமாய் ஏற்றியிருக்கிறார்கள் தவிர சிறிது காலத்திற்கு முன் குறைவாகவிருந்த பிரயாணிகளின் சார்ஜுகளையும் கம்பெனியார் உயர்த்தியிருக்கிறார்கள். இதுவரை சண்டையால் நிலக்கரி சரியானபடி அகப்படவில்லையென்று சொல்லிவந்தார்கள். இனியும் அவர்கள் என்ன சமாதானம் சொல்லுவார்களோ தெரியவில்லை தவிரவும் திரவ பதார்த்தங்களின் மேல் விதித்திருக்கும் சார்ஜும் சொல்லவேண்டியதில்லை. இவற்றையெல்லாம் ரயில்வேக் கம்பெனியார் அவசியம் குறைக்க வேண்டும்.

## இராஜீய விஷயம்.

சகோதரர்களே!

இனி நான் உங்களுக்கு இந்திய அரசியல் சம்மந்தமான சில விஷயங்களை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நம் ஸௌராஷ்ட்ரப் பிராமண சகோதரர்கள் ஒவ்வொருவரும் தேசியக் கட்சியைச்சேர்ந்தவர்கள் என்பதே எனது துணிவு. காங்கிரஸ் செய்த தீர்மானம் எதுவோ அதுவே இந்தியப் பொதுஜன அபிப்பிராயமாகவேண்டும். மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தம் போதுமானதல்லவென்றும், ஏமாற்றத்தைத்தரக்கூடியதாயிருக்கிறதென்றும், காங்கிரஸ் செய்துள்ள தீர்மானம் முற்றிலும் நியாயமானதே. பிரமாதமாய்க்கிடைத்துவிடப்போகிறதென்று சொல்லிக்கொண்டேயிருந்து கடைசியாக ஒரு கொசுவைக்காட்டினாற்போல இருக்கிறதேயன்றி நினைத்ததற்கும் கிடைத்ததற்கும் சிறிதும் ஒத்துப்பார்க்க ஹேதுவில்லை. ஆகஸ்டு 20உ அறிக்கை வெளிவந்தபோது ஏதோ நமக்குத்திருப்திகரமான சீர்திருத்தங்கள் கிடைக்கும் காலம் கிட்டிவிட்டது என்று உள்ளம் பூரித்தோம். இப்பொழுது இராஜப்பிரதிநிதியும், இந்தியா மந்திரியும் சேர்ந்து நமக்குக் கொடுத்த சீர்திருத்தத்தைப்பார்த்து ஏமாற்றமடைய நேர்ந்துவிட்டது.

இது சமயம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திருப்தியற்ற சீர்திருத்தத்தினால் நமக்குள் கட்சி பேதங்கள் உண்டாகவும் அதின் நிமித்தம் அநேகவித கஷ்ட நஷ்டங்கள் ஏற்படவும காரணமாகயிருக்கிறது. இச்சீர்திருத்தத்தினால் விளையும் நன்மையோ மிகக்குறைவாகயிருக்கிறது. அதிலும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அச்சொற்ப நன்மையையும் தின்றுவிட்டது. இந்தியர்கள் இன்னும் சுய ஆட்சி பெறுவதற்கு அருகதையடையவில்லையென்று பலமுறை இராஜாங்கத்தார் சொல்லி வருகிறார்கள். இந்தியர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்து 150 வருடங்களுக்கு மேலாகியும் ஆளும் திறமை இவர்களுக்கு வரவில்லையானால் அந்தப்பெருமை யாரைச்சேர்ந்ததென்று நம் இராஜாங்கத்தார் கவனிக்கவேண்டும். இனி மேலும் நம்மை ஆளும் திறமையற்றவர்களென்று போலிச்சமாதானத்தைச் சொல்லிக்கொண்டிராமல், பூர்ண சுயஆட்சி ஏற்படும்படியான சீர்திருத்தத்தை உடனே கொடுக்கவேண்டும்.

## பஞ்சாப் விஷயம்.

சகோதரர்களே! இனி நான் சொல்லப்போவதெல்லாம் நீங்கள் சென்ற பல மாதங்களாகக் கேட்டுக்கேட்டு அலுத்துப்போன விஷயங்களேயாகும் எனினும் அவைகளை நினைக்குந்தோறும் என் உள்ளத்தெழுகின்ற அடக்கமுடியாத விசனத்தை உள்ளேயே நிறுத்தி நெட்டுயிர்ப்போடிருத்தலை விட அதை ஒருவாறு வெளிப்படுத்தி சிறிது ஆறுதலாவது அடையலாமென்றெண்ணியே சொல்லத்துணிந்தேன்.

இந்திய சகோதரர்களே! பஞ்சாபில் நடந்த சம்பவங்கள் எல்லாம் நாகரீகமிருந்து வரும் இக்காலத்தில் நடக்கத்தகுந்தவைகளா? இராணுவச் சட்டத்தையாதொரு அவசியமுமில்லாதிருக்கும்பொழுது அமுலுக்குக்கொண்டுவந்து நிரபராதிகளான பலருடைய உயிர்களைக் கொள்ளைகொண்ட இந்த பஞ்சாப் கவர்மெண்டாரின் நீதிப்பெருக்கை என்னென்றுரைப்பது? இவைகளுக்கெல்லாம் காரணமாயிருந்த அதிகாரிகள் தாங்கள் செய்த குற்றத்தினின்றும் தப்பித்துக்கொள்ள முடியுமா? அவர்கள் நடத்தியிருக்கும் ஒவ்வொரு பரிதாப சம்பவங்களை நினைக்குந்தோறும் மெய் நடுக்கம் உண்டாகாமலிருக்கவில்லை. சாத்தான் செய்த குற்றத்திற்காகப் பரம பிதாவானவர் அவனைச் சபித்ததுபோலல்லவோயிருக்கிறது! அதாவது, கிறிஸ்தவர்களின் வேத புஸ்தகமாகிய பைபிளில், பரம சுத்தமான ஆதாம் ஏவாள் என்பவர்களைத் துர்ப்போதனை செய்து பாபத்திற்குள்ளாக்கிய சாத்தான் என்னும் பிசாசை பரம பிதாவானவர் "மார்பினால் ஊர்ந்து செல்லக்கடவாய்" யென்று சாபமிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாப் ஜனங்கள் இந்த சாத்தானைப்போலவா அவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டார்கள்? இன்னும் அங்கு நடந்திருக்கும் அக்கிரமங்களை இன்றைக்கெல்லாம் பிரசங்கித்தாலும் தீராதுகொண்டேதானிருக்கும். இவைகளையெல்லாம் விசாரிக்க ஏற்பட்ட ஹண்டர் கமிட்டியோ ஒருதலைப்பக்ஷமாயும், காருண்யமின்றியும் தங்கள் ரிப்போர்ட்டை வெளியிட்டுவிட்டது போதாக்குறைக்கு நம் இந்திய கவர்மெண்டாரும் இந்தியா மந்திரி அவர்களும் அதையனுசரித்தே ஒத்துப் பாடிவிட்டார்கள். பக்ஷபாதமற்ற பிரிட்டிஷ் பார்லிமெண்டாராவது இதைத்தீர விசாரித்து நியாயம் வழங்குவதோடு பஞ்சாபில் நடந்த அக்கிரமங்களுக்குக் காரணபூதர்களான உத்தியோகஸ்தர்களையும் தகுந்தபடி சிக்ஷிப்பார்களென்று நம்புகிறேன்.

## ரௌலட் சட்டம்

சகோதரர்களே! ரௌலட் சட்டம் என்பது ஒன்று இப்பொழுது ஊர்ஜிதத்திலிருந்து வருவதானது நீங்களெல்லோரும் அறிந்த விஷயம். மகாயுத்தத்தில் நம் இந்தியர்கள் ஏராளமான திரவியத்தையும் படைகளையும் கொடுத்துதவியதின் பிரதிப்பிரயோஜனம் இதுதானோ? மாம்பழம் கொடுத்த ஒருவனுக்குப்பிரதியாக மண்கட்டியைத் தருவது போலன்றோ இருக்கிறது? இது விஷயமாய் இந்தியர்களின் மனதானது புண்பட்டுப் போயிருக்கிறது. இந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டாலொழிய இவர்களின் புண் ஆறாது. ஆகவே இது உடனே ரத்து செய்யப்படவேண்டும்.

## அடக்குமுறைச் சட்டங்கள்.

தவிர சகோதரர்களே! நமது சுதந்திரங்களுக்கு இடையூறாக விருக்கும் அடக்குமுறைச் சட்டங்கள் யாவும் உடனே ரத்து செய்யப்படவேண்டும். அப்படிச்செய்யப்படாதவரை நாமெல்லோரும் பிறப்புரிமையிழந்தவர்களேயாவோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முக்கிய கொள்கைகள்; சமத்துவம், சகோதரத்வம், சர்வசுதந்திரத்வம் என்பது உண்மையானால் இந்தச்சட்டங்கள் யாவும் சட்டப் புஸ்தகங்களிலிருந்து உடனே நீக்கப்பட்டுவிடவேண்டும்

## பத்திரிகைகள்.

பிரபஞ்சப்போக்கு எவ்வாறிருக்கிறதென்பதை நாம் பத்திரிகை மூலமாயல்லாது அறிய முடியாது.

இந்த தென்னாபிரிக்காவில் நமது ஜனங்கள் சுமார் ஒரு லட்சத்துக்கு மேலிருந்தும் இதுவரையில் ஒரு பத்திரிகையில்லாத குறையானது இருந்து வந்தது. சமீப காலமாக "சௌராஷ்ட்ர" என்னும் பத்திரிகை நம் முன் வழங்கிவருகிறது. அது ஆரம்பத்தில் மாதம் இருமுறைப் பிரசுரமாக விருந்து சிறிது காலத்திற்கு முன்பே வாரப்பிரசுரமாக மாறுபட்டிருக்கிறது. இதற்குச் சந்தாதாரர்கள் அதிகமாய் ஏற்பட்டு ஆதரித்து வந்தால் தினப்பிரசுரமாகவும் மாற்றலாம். அப்பொழுதுதான் பத்திரிகையின் பலனை நாம் முற்றும் அடைந்தவர்களாவோம். அப்படியில்லாதவரை நாம் இன்று போலவே "சௌராஷ்ட்ர" பத்திரிகையிலிருந்து பழைய சமாசாரங்களையே வாசித்துக்கொண்டிருக்கவேண்டி வரும்.

இப்பத்திரிகையின் ஆசிரியராகிய சேலம் பிரம்மஸ்ரீ வி. கே. சன்னய்
யர் அவர்களின் ஜாதி அபிவிருத்தி விஷயமான முயற்சி செய்பத்தாமன்று.
அவருடைய ஊக்கம் மென்மேலும் ஓங்கி வளர்ந்து வரும் என்றே நம்பு
கிறோம்.

இந்தப் பத்திரிகையானது அன்னியர்களுடைய அச்சுக்கூடத்தில் அச்
சிடப்பட்டு வருகிறது. இதற்காக சொந்த அச்சுக்கூடமொன்றை ஸ்தாபிக்
கவேண்டும் அதன்னியில் எக்காலத்திலும் தாழ்வின்றி நடந்து வருதற்காக
பெர்மனென்ட் பண்டையும் ஏற்படுத்தவேண்டும் இது விஷயத்தில் எல்லா
கனதனவான்களும் ஊக்கம் காட்டி பணவுதவி செய்யவேண்டும்.

## மகாநாடு கூடுவதின் பிரயோஜனம்

சகோதரர்களே! சுமார் 20 25 வருஷங்களுக்கு முன்னர் நம்
மில் பிரமுகர்களாயிருந்த பலர் செய்த யோசனையின்படி 1897ம்
வருஷத்தில் பிரம்மஸ்ரீ மதுரை V. S. கிருஷ்ணசாமய்யர் அவர்
களின் தலைமையின்கீழ் கும்பகோணத்தில் முதலாவது மகாநாடும்
1898ம் வருஷத்தில் சேலம் புட்டா அழகிரி பாகவதர் அவர்களின்
தலைமையின்கீழ் மதுரையில் இரண்டாவது மகாநாடும் 1899ம் வரு
ஷத்தில் உறையூர் அறந்தாங்கி கஸ்தூரி ரெங்கய்யர் அவர்களின
தலைமையின்கீழ் சேலத்தில் மூன்றாவது மகாநாடும் 1900ம் வருஷத்
தில் மதுரை புளியடி முனிநாகேந்திர பாகவதர் அவர்களின் தலை
மையின்கீழ் உறையூரில் நான்காவது மகாநாடும் நடைபெற்று அதில்
ஆசாரம், மதம், ஒழுக்கம், கல்வி கைத்தொழில், வியாபாரம் முத
லிய பிற்பல விஷயங்களைப்பற்றிப்பேசித் தீர்மானித்தார்கள்.

அப்பால் துர்திஷ்டவசத்தால் அதேமாதிரி வருஷாவருஷம்
கூடாமல் தவறவிட்டுவிட்டார்கள் ஆனபோதிலும அந்த நான்குவரு
ஷங்களிலும் மகாநாடு நடந்ததினுடைய பிரதிப்பிரயோஜனமாக
பற்பல ஊர்களில் வசிக்கும் நம்மவர்களின் மனத்தில் பிரதானமாக
வித்தியா தாகமானது (கல்வியின்பேரில் ஆசை) ஏற்பட்டு ஆங்
காங்கு அவ்வவ்விடத்திற் கேற்ப பல பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு
வித்தை கற்பிக்கப்பட்டு வருகின்றன. நாளது வரையில் அக்கல்

விச்சாலைகள் தினே தினே அபிவிர்த்தி அடைந்து வருவதோடு பின்னும் ஜாஸ்தியான முன்னேற்றமடைவதற்கு வேண்டிய அறிகுறிகளும் காணப்பட்டு வருவதைப்பார்த்து மிக்க சந்தோஷமடைகிறேன். இது விஷயத்தில் இம்மதுரைமாநகரமே ஜாஸ்தி அபிவிர்த்தி அடைந்த இடமாகக்கருதப்படுகிறது என்று நான்கௌரவமாகச் சொல்லுவேன்.

மேற்கண்ட நான்கு வருஷங்களில் கூடின மகாநாடுகளின் பலனே இதுவானால் வருஷந்தோறும் தவறாமல் மகாநாடுகள் கூடி நாம் உழைத்து வருவோமானால் அதன் பிரயோஜனங்கள் எத்தகையதாய் இருக்குமென்பதை நான் சொல்லாமலே தெரிந்துக்கொள்ளுவீர்கள் மகாநாடு கூடுவதினால் ஏற்படக்கூடிய முக்கியமான பலன்களைப்பற்றி சற்று ஆராய்வோம்.

தென்னிந்தியாவில் பற்பல பாகங்களில் சிதறுண்டுகிடக்கும் ஸௌராஷ்டிர பிராமணர்கள் கிணறு தவளைகளைப்போல்தங்கள் தங்கள் ஊர்களிலேயே இருந்துகொண்டு தாங்கள் அனுஷ்டித்து வரும் ஆசாரம், நடை உடை பாவனை முதலியவைகளையே ஸ்திரமாகவைத்துக்கொண்டு இருந்துவிடாமல் வருஷங்கள்தோறும் கூடும் மகாநாடுகளில் பற்பல இடங்களிலிருந்து ஒரேஇடத்தில் வந்துகூடி ஒருவருக்கொருவர் இதரர்களுடைய கொள்ளத்தக்கவாகிய சதாசாரங்களைக் கைக்கொண்டும் தள்ளத்தக்கவாகிய துராசாரங்களைக் கைவிட்டும் ஸௌராஷ்டிர பிராமணர்களாக பிறந்த எல்லா இடங்களிலுமுள்ள யாவரும் ஒரேதன்மையானதும் கிரமமானதும் சாஸ்திரீகமானதுமான அனுஷ்டானமுறைகளைக் கைக்கொள்ள ஏதுவாயிருக்கும்.

இது இப்பொழுது புதிதாகக் கண்டுபிடித்த முறையல்ல நமது புராதன முன்னோர்களாகிற மஹரிஷிகள் காலந்தொட்டு இதை ஸ்தூலமாக விளக்கியிருக்கிறார்கள். அதாவது நாம் இப்பொழுது மகாநாடு கூடும் முறையில்லாவிட்டாலும் வேறு முறையில் நம் வாழ்க்கையிலேயே ஓர் அம்சமாகச் சேர்த்து அமைத்துவைத்

ருக்கிறார்கள். அது எவ்வாறெனில் வடதேசத்திலுள்ள ஒவ்வொரு வனும் தென்தேசத்துக்கடேசிக் கோடியிலிருக்கிற சேதுவில் ஸ்நாநஞ்செய்து அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீராமநாதரை தரிசிக்கவேண்டியது அத்தியாவசியமென்றும், தென்தேசத்திலுள்ள ஒவ்வொருவனும் வடதேசத்திலுள்ள மஹாஸ்தலங்களாகிய கயா, காசி, ஹரிதுவாரம் பிர்மகபாலம், முதலிய க்ஷேத்திரங்களுக்குச்சென்று ஆங்காங்குள்ள புண்ணியநதிகளில் ஸ்நாநம் செய்வதும் மூர்த்திகளைத்தரிசிக்க வேண்டியதும் மிகமுக்கியமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால் ஞான சம்பந்தமாக விசேஷ புண்ணிய பலன்கள் கிடைப்பதோடுகூட தென் தேசத்தார் வடதேசத்தவர்களின்நடை உடை பாவனை, ஆசாரம், முதலியவைகளைத் தெரிந்துக்கொள்ளவும் வடதேசத்தார் தென்தேசத்தாரின் நடை, உடை பாவனை, ஆசாரம், முதலியவற்றை தெரிந்துக்கொள்ளவும் ஹேதுவாக்கி வைத்தார்கள் அந்தக் காலத்தில் இந்தமட்டில் தெரிந்துக்கொள்வது போதுமானதாயிருந்தது இப்பொழுதுள்ள தேவைகளும் ஆசாபாசங்களும் அதிகரு ஜாஸ்தியாகிவிட்டபடியால் அந்த முறைகளோடுகூட மேற்சொல்லியுள்ள மகாநாடுகள் கூடும் யாத்திரையிலும் ஒவ்வொருவருடைய அபிப்பிராயங்களையும் பரஸ்பரம் கலந்துக்கொள்ளுதலும் அததந்த காலத்திற்கேற்ப நவீன முறைகளை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்களை செய்வதும் அவசியமாகிவிட்டது.

இதற்கு முன் நடந்த நான்கு மகாநாடுகளிலும் நம் ஜாதிப் பெண்மணிகள் மகாநாட்டில் கலந்துக்கொண்டதாக இல்லை; இப்பொழுதோ இந்த மகாநாட்டினிடம் தங்களுக்குள்ள அபிமானத்தைக் காட்டவும் ஸ்திரீதர்மம் ஆசாரம் முதலியவைகளின் விஷயமாய் மகாநாடு எப்படித்தீர்மானிக்கிறதென்பதைக் கவனிக்கவும் முன்வந்து தங்களுக்கேற்படும் பலவித அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது பொறுமையுடன் நம் எதிரில் வீற்றிருக்கும் அவர்களைப்பார்த்து என் மனமானது அடங்கா மகிழ்ச்சி அடைகிறது.

அவர்களுடைய குதூகலமான வரவைக் கவனிக்கும் போது இனி நடக்கும் மகாநாடுகளில் அவர்களுடைய சங்கியையானது வளர்பிறைச்சந்திரனைப்போல் விர்த்தியாகுமென நம்புவதுடன் மகாநாடு நடவடிக்கைகளில் தாங்களும் கலந்து தங்கள் அபிப்பிராயங்களையும் வெளியில் தெரிவிக்கும்படியான நிலைமைக்கு வருவார்களென்று நம்புகிறேன்.

[illegible]

[illegible]

ருக்கிறார்கள். அந்த வியாபார சம்மந்தமாய் ஒரு ஊரார் மற்றொரு ஊராரிடம் போக நேர்ந்தால் அப்பொழுது பந்தியும் சமமாக நடந்துவருகிறது இவ்வளவிருந்தும் பெண் கொடுக்கல் வாங்கல்மட்டும் அந்தந்த ஊரார்கள் அந்தந்த ஊரிலேயே சம்மந்தம் செய்து வருகிறார்கள். ஒரு ஊரார் மற்றொரு ஊராரோடு பெண்கொடுக்கல்வாங்கல்சம்மந்தம் வைத்துக்கொள்ளாததற்கு அவரவர்களுடைய நடை, உடை, பாவனைகளில் சற்றுவித்தியாசம் காணப்படுவதைத்தவிர வேறொருகாரணமிருப்பதாக எனக்குத்தோன்றவில்லை.

இனியும் இப்பேர்ப்பட்ட சொற்ப வித்தியாசங்களை எல்லாம் பொருட்படுத்தாது பரஸ்பர சம்மந்தங்களை உண்டாக்கிக்கொள்ள கூடிமானவரை முயல வேண்டும். அப்படி சம்மந்தங்களை உண்டாக்கி கொள்வோமானால் ஒருவருக்கொருவர் நெருங்கிப்பழகவும் ஐக்கிய பத்தியம் ஏற்படவும் ஏதுவாகும் அப்பொழுது நம் ஸௌராஷ்டிரப்பிராமணர்களனைவரும் ஒரு ஜனக்கட்டாக அமைந்து விடுவோம்.

## இளவரசர் விஜயம்

சகோதரர்களே!

நமது மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தித் திருமகனார் சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்யப்போவதாகக் கேள்வியுற்று மிக்க ஆனந்தமடைகிறேன். நம் இந்திய சகோதரர்கள் அனைவரும் அடங்காமகிழ்ச்சியோடும் குதூகலத்தோடும் வரவேற்க வேண்டும். இராஜபக்தி தேசபக்தியில் இந்தியர் மிகுந்தவர்கள் என்பது பிரசித்தமேயாயினும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதனை சமூகத்தின் இது வரை பழகியறியாத மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசரும் பரிஷ்காரமாகத் தெரிந்து கொள்ளுமாறு செய்தல் வேண்டும். அவருடைய வரவினால் நமக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் யாவும் தீர்ந்து சுகஜீவிகளாய் விடுவோமென்று பூரண நம்பிக்கையுடையவனாயிருக்கிறேன் இச்சந்தர்ப்பத்தில் அவருடைய வருகை நேர்ந்ததானது நாம் கொடுத்து வைத்த பாக்கியமென்றே கொள்ளல் வேண்டும். அவர்திரேகதிடகாத்திரத்தோடும் நீண்ட ஆயுளோடும் வாழ்ந்திருக்க வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## முடிவுரை

சகோதர சகோதரிகளே

இத்தோடு எனது பிரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன். பின்னுமொரு முறை உங்களெல்லோருக்கும் நான் அதிக உற்சாகத்துடன் நல்வரவு கூறுகிறேன். வெளியூர்களிலிருந்து வந்திருக்கும் சகோதரர்களுக்கு நான் செய்து கொடுத்திருக்கும் சாப்பாடு வசதி இட வசதி முதலியன மிக சொற்பமாயிருந்தாலும் அதையாவரும் பெருமனதுடன் அங்கீகரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாநாட்டில் எனக்களித்த ஸ்தானத்திற்காக எனது மனமார்ந்த வந்தனத்தைச்செலுத்துகிறேன். மகாநாடும் இனிது நடைபெறக்கருணைசெய்ய கடவுள் அநுக்கிரகிப்பாராக.

ஜயம்! ஜயம்!!!

ஸ்ரீ வெங்கடாசலபதி ஐயர்,

உபசரணைக்கமிட்டி தலைவர்.